வருவதற்கு, வேளாண்மைத் துறை அனைத்து ஆலோசனைகளை வழங்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மல்லிகைப்பூ விளை கின்ற ஊர்க்காரர்கள் எல்லாம் கையைத் தூக்கிக் கொண் டிருந்தால், இந்தக் கேள்வியில் துணைக் கேள்வி வராது. காட்டுமன்னார்கோயில் பகுதியில் சென்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிய கேள்வி இது.

வினா எண் 454, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை. திரு. வே. கோபாலகிருஷ்ணன் கேட்கிறார். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

454—

ஆதிதிராவிடர்களுக்காக உதவி இயக்குநர் வேலைவாய்ப்பு அலுவலகம் நியமித்தல்.

*10857—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) மாவட்ட நலத் துறை அலுவலகங்களில் ஆதிதிராவிட ருக்குரிய சதவீதத்தை நிரப்புவதற்கு உதவி இயக்குநர் வேலை வாய்ப்பு அலுவலகம் நியமிக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்தில் அம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் 18 சதவீதம்

ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களை நியமிக்கின்ற அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறதா என்பதை அறிய மாவட்ட ஆதி திராவிட நல அலுவலகத்தில் ஒரு பிரிவை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவல கத்தில், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் தலைமையில் அந்த மாவட்டத்தில் 18 சதவீதம் SC-க்கும் 1 சதவீதம் ST-க்கும் வழங்கப்படுகிறதா என் பதை ஆய்வு செய்வதற்கு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட் டிருக்கிறது. அதன் அடிப்படையில் இதை கவனித்துக் கொண் டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தர ராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பல்வேறு அரசுத் துறைகளில் குறிப்பாக Department of Sugars and Co-operative Department போன்ற துறைகளில் 18 விழுக்காடு நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. அந்த இடங்களை நிரப்புவதற்குத் துறை எடுத் துள்ள நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் வாயி லாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஆராய்வதற்காகத்தான் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு இயங்கி வந்தது. ஆனால், தற்போது இயங்காமல் இருக்கிறது. அதை மீண்டும் நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 455, டாக்டர் வெ. சரோஜா. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS